| | |
|---|---|
| அ.வ.எண். | 395/2012 |
| பெயர் | வெங்கடேஷ் |
| தந்தை பெயர் | பழனிசாமி |
| சாட்சி | வா.சா.2 |
| நாள் | 18.02.2020 |

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை வரவில்லை. சாட்சியம் அளிப்பதற்கு முன்பு என்னுடைய தாத்தா பழனியப்பன் என்னை வரவேண்டும் என கூறினார். நான் இதுவரையிலும் வேறு எந்த வழக்குகளிலும் சாட்சியம் அளிக்கவில்லை. ஓமலூரில் நான் ஆடு திருடியதாக கூறி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை. வாதி மற்றும் 1 ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயர் குப்பண்ண கவுண்டர். இந்த வழக்கை பழனியப்பன் தாக்கல் செய்துள்ளார். என்னென்ன சொத்துகளுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ஞாபகமில்லை. வாதிக்கு ராஜாத்தி மற்றும் பாப்பா என்ற இரண்டு மகள்கள். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் பங்கு மாற்றிக்கொள்ளும் முறையில் அனுபவித்து வருவதாக கூறியுள்ளதற்கு என்ன அர்த்தம் என்றால் பாகம் பிரிக்கவில்லை என்று அர்த்தம். ஒருவருடைய பங்கை மற்றவர் மாற்றி அனுபவித்து வருவதைத்தான் பங்கு மாற்றிக்கொள்ளும் முறை என்றால் இல்லை. வாதியும், 1 ம் பிரதிவாதியும் பங்குகளை மாற்றிக்கொள்ளவில்லை என்றால் பிரிக்கவில்லை, மாற்றிக்கொள்ளவும் இல்லை. என்னுடைய வயது 30. குப்பண்ண கவுண்டர் 35 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். எவ்வாறு எனக்கு தெரியும் என்றால் பஞ்சாயத்தில் 1 ம் பிரதிவாதி கூறினார். பஞ்சாயத்து 2012 ல் நடைப்பெற்றது. தேதி ஞாபகமில்லை. நான் கூறுவது பொய் எனவும் வாதியே பஞ்சாயத்து நடைப்பெற்றதாக கூறவில்லை எனவும், அவர்கள் கூறியதன் அடிப்படையில் பஞ்சாயத்து நடைப்பெற்றதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும் சேர்ந்து பஞ்சாயத்து செய்தேனா என்றால் ஆமாம். என்னுடைய தாத்தாவான வாதி பஞ்சாயத்து நடைப்பெற்றதாகவும், என்னுடைய பெயரையும் வேறு நபர்களின் பெயரையும் குறிப்பிட்டு பஞ்சாயத்து நடைப்பெற்றதாக கூறவில்லை எனவும் ஆகவே நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய 22 வயதில் பஞ்சாயத்து செய்ததாக நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. வாதி மற்றும் 1 ம் பிரதிவாதிக்கு தனித்தனியாக வீடு இருந்து தனித்தனியாக வீட்டுவரி, மின்இணைப்பு ஆகியவற்றை செலுத்தி வருகின்றனர் என்றால் அவருடைய தகப்பனார் குப்பண்ணகவுண்டர் தான் கட்டிக்கொடுத்தார். எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் வாதியும், 1 ம் பிரதிவாதியும்

பஞ்சாயத்தில் கூறினார்கள். அவ்வாறு யாரும் கூறவில்லை எனவும், சொல்லிகொடுத்ததன் பெயரில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி மற்றும் 1ம் பிரதிவாதி பெயரில் தனித்தனியாக பட்டா பெற்று வரி செலுத்தி அனுபவித்து வருகின்றனர் என்றால் தனித்தனியாக வீடுகள் உள்ளது ஆனால் காடு பாகம் பிரிக்கவில்லை. 26.10.2006ல் பழனியப்பன் தன்னுடைய குடும்பத்தாருடன் சேர்ந்து தன்னுடைய மகள் ராஜாத்திக்கு கிரயம் கொடுத்துள்ளார்கள் என்றால் இல்லை. இரண்டு பேரும் தனித்தனியாக பாகம் பிரித்து அனுபவித்து வந்ததால்தான் கிரயம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. குப்பண்ண கவுண்டரின் மனைவி பெயர் அய்யம்மாள். தனக்கு பாத்தியப்பட்ட சொத்தினை தன்னுடைய மகளான 3ம் பிரதிவாதிக்கு உயில் எழுதிவைத்துள்ளார் என்றால் அவருடைய தனிப்பட்ட முறையில் சொத்துக்கள் இல்லை குப்பண்ண கவுண்டரின் சொத்துக்கள் தான். அய்யம்மாள் தனக்கு பாத்தியப்பட்ட சொத்தினை 3ம் பிரதிவாதிக்கு உயில் எழுதிகொடுத்து, 3ம் பிரதிவாதி உயில் படி உரிமையாளர் எனக் கூறி 2ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துள்ளார் என்றும் அது எனக்கு தெரியும் என்றால் எனக்கு தெரியாது. 3 சர்வே எண்களில் சொத்துக்கள் உள்ளது. என்னென்ன சர்வே எண்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. 3 சர்வே எண்களுக்கு சேர்த்து 2 ஏக்கர் 5 செண்ட் உள்ளது. குப்பண்ண கவுண்டருக்கு எந்தவகையில் பாத்தியம் என்பதற்கு என்ன ஆவணத்தை பார்த்துள்ளேன் என்றால் பட்டாவை பார்த்துள்ளேன். வாதி குப்பண்ண கவுண்டர் பெயரில் உள்ள பட்டாவை ஒப்படைத்துள்ளாரா என்றால் ஒப்படைத்துள்ளார். நான் கூறுவது பொய் எனவும் 2 ஏக்கர் 5 செண்ட்க்கு ஆவணங்களை ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. பஞ்சாயத்தில் பாகம் பிரித்து தர கோரினார்கள் எனவும், அதற்கு 1ம் பிரதிவாதி கட்டுபடவில்லை என நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதியிடமிருந்து 2ம் பிரதிவாதி வாங்கிய சொத்தை தொந்தரவு கொடுக்கவேண்டும் என்பதற்கு வாதி தாக்கல் செய்துள்ள வழக்கில் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் 2 பேரும் என்னுடைய தாத்தாக்கள் தான். எனக்கு வழக்கை பற்றி தெரியாது என்றால் சரியல்ல. வாதி , 1ம் பிரதிவாதியின் சகோதரிகளுக்கு என்ன கொடுக்கப்பட்டது, எப்போது கொடுக்கப்பட்டது என்பது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் வாதி மற்றும் 1ம் பிரதிவாதி பஞ்சாயத்தில் கூறினார்கள். அவர்கள் அவ்வாறு கூறவில்லை என்றால் சரியல்ல. நான் வாதியிடம் நெருங்கிய உறவில் உள்ளேன் எனவும், ஆகவே வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிப்பதால் என்னுடைய சாட்சியம் ஏற்புடையது என்றால் சரியல்ல.

அனுமதியின் பேரில் மறுவிசாரணை

வாதி மற்றும் 1ம் பிரதிவாதி என்னுடைய நேரடி தாத்தாவா என்றால் இல்லை 2ம் தலைமுறையா என்றால் ஆமாம்.

குறுக்குவிசாரணை இல்லை.

7, 8 பிரதிவாதிகள் தரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**ஒம்/-திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**மேட்டுர்.**